தமிழ்நாடு முழுவதும் 68 இடங்களில் 1500 சவரன், பணம் கொள்ளையடித்து

₹4.5 கோடியில் மில், ₹1.5 கோடியில் நிலம் வாங்கிய கொள்ளையன் கைது

- ₹13 லட்சத்தில் சொகுசு பைக் வைத்திருந்ததும் அம்பலம்
- சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை

கோவை, ஜூலை 11: தமிழ்நாடு முழுவதும் 68 இடங்களில் கொள்ளையில் ஈடுபட்டு ₹4.5 கோடியில் மில் வாங்கிய கொள்ளையன், கூட்டாளியுடன் கைது செய்யப்பட்டான்.

கோவையில் சிங்காநல்லூர், பீளமேடு, ராமநாதபுரம், துடியலூர் உள்பட பல்வேறு பகுதிகளில் 18 வீடுகளில் ஆயுதங்களை காட்டி மர்ம நபர்கள் நகை, பணத்தை கொள்ளையடித்து சென்றனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கொள்ளையர்களை பிடிக்க மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவின்பேரில், தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த தனிப்படையினர், கோவையில் ஒரு வீட்டில் கொள்ளையடிக்க முயன்றதாக ஒருவரை மடக்கி பிடித்தனர்.

விசாரணையில் அவர் தேனி பெரியகுளத்தை சேர்ந்த 'ராடு மேன்' என அழைக்கப்படும் மூர்த்தி (38) என்பது தெரியவந்தது. அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து அவரது கூட்டாளியான தேனியை சேர்ந்த அம்சராஜ் (26) என்பவரையும் போலீசார் பிடித்தனர். இவர்கள் பல இடங்களில் கொள்ளையடித்தது தெரிய வரவே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக நேற்று துணை கமிஷனர் ஸ்டாலின் கூறியதாவது: மூர்த்தி கடந்த 4 ஆண்டாக திருட்டு, கொள்ளை, வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் மீது தமிழ்நாடு அளவில் 68 கொள்ளை வழக்குகள் உள்ளன. இவர் முதல் முறையாக கோவையில் கைதாகி இருக்கிறார். இவரிடம் ஒரு கார், 6 பைக் பறிமுதல் செய்யப்பட்டது. கொள்ளை பணத்தில் ₹13 லட்சத்தில் சொகுசு பைக் வாங்கியிருக்கிறார். ராஜபாளையத்தில் ₹4.5 கோடியில் ஸ்பின்னிங் மில் வாங்கியுள்ளார். ராஜபாளையம் பஸ் ஸ்டாண்டில் சுமார் 1.5 கோடி ரூபாயில் 57 சென்ட் இடம் வாங்கியிருக்கிறார். அங்கே கட்டிடம் கட்டி, கடை நடத்த திட்டமிட்டிருந்தார். மாநில அளவில் 68 கொள்ளை வழக்கில் 1,500 பவுன் தங்க நகைகள், ₹1.76 கோடி கொள்ளையடித்துள்ளார்.

இவற்றை கொடுத்து மனைவி மூலமாக பல்வேறு இடங்களில் சொத்து வாங்கியுள்ளார். இவருடன் தொடர்புடைய விருதுநகரை சேர்ந்த சுரேஷ் என்பவர் விருதுநகர் போலீசாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டார். மூர்த்தியின் கூட்டாளிகளான மனோஜ்குமார், சுதாகர், ராம் பிரகாஷ், பிரகாஷ் ஆகியோரை தேடி வருகிறோம்.

கொள்ளையடித்த பணத்தை இவர்கள் பங்கு போட்டுள்ளனர். சந்திரசேகரன், பெருமாள், காளிதாஸ், ஒரு பெண் ஆகியோர் மூலமாக நகைகளை உருக்கி தங்கக்கட்டியாக மாற்றி விற்பனை செய்துள்ளனர்.

மூர்த்தியின் மனைவி ராஜபாளையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். மூர்த்தி மீது விருதுநகரில் 20 வழக்குகள், மதுரையில் 14 வழக்குகள், திருச்சியில் 16 வழக்குகள் உள்ளன. கோவையில் அவர் கொள்ளையடித்த 63 பவுன் தங்க நகைகள் மீட்கப்பட்டன. மூர்த்தியின் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூர்த்தியுடன் தொடர்புடைய மற்ற கொள்ளையர்களையும் விரைவில் பிடித்து விடுவோம்.

இவ்வாறு துணை கமிஷனர் ஸ்டாலின் கூறினார்.

▶ தமிழ்நாடு முழுவதும் மூர்த்தி கைவரிசை காட்டிய கொள்ளைகளை காட்டும் கேமரா காட்சிகள்.

'ராடு மேன்' சிக்கியது எப்படி?

▶ மூர்த்தி, அம்சராஜ்.

கொள்ளை வழக்கில் கைதான மூர்த்தி எப்போதும் இரும்பு ராடு வைத்து பூட்டிய வீட்டை திறந்து கொள்ளையடிப்பதால் அவருக்கு கொள்ளையர் வட்டாரத்தில் 'ராடு மேன்' என அடைமொழி உருவானது. மூர்த்தி எப்போதும் தலையில் குல்லா அணிந்து முகத்தை மறைத்து திருட செல்வார். அப்போது நீல நிற முழுக்கை சட்டை அணிவார். அதற்குள் பேக் வைத்திருப்பார். அதில்தான் திருடிய நகை, பணம் போட்டு வைத்திருப்பார்.

சில நேரங்களில் தனியாகவும், ஆள் இருந்தால் கூட்டாளிகளுடன் சென்றும் கொள்ளையடிப்பாராம். பெரும்பாலும் ரயில் பாதை அருகே வீடுகளை நோட்டம்விட்டு கொள்ளையடித்து பல கிமீ தூரம் நடந்து சென்று பின்னர் பஸ் ஏறி தப்பி செல்வார். இதனால்தான் இவரை இத்தனை ஆண்டுகள் பிடிக்க முடியாமல் இருந்துள்ளது. எந்த இடத்திலும் கண்காணிப்பு கேமராவில் இவரின் முகம் தெரியவில்லை. கேமரா இருந்தாலும் இவர் முகத்தை மறைத்தபடி சென்று தப்பியுள்ளார். ஆனால் கோவை போலீசார் மூர்த்தியின் நீல நிற சட்டை, குல்லாவை வைத்து தொடர்ச்சியாக கண்காணித்து பிடித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் தாலியைக்கூட விட்டுவைக்காத நீங்கள்

இந்தியாவிலேயே இல்லாத மாணவரை நீட் தேர்வு எழுத அனுமதித்தது எப்படி?

- குற்றவாளிகளுக்கு உடந்தையாக என்டிஏ செயல்படுகிறதா?
- ஐகோர்ட் கிளை நீதிபதி சரமாரி கேள்வி

மதுரை, ஜூலை 11: இந்தியாவிலேயே இல்லாத மாணவரை நீட் தேர்வு எழுத தேசிய தேர்வு முகமை அனுமதித்தது எப்படி? குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயல்படுகிறதா? என ஐகோர்ட் கிளை நீதிபதி சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

வடமாநிலங்களில் நீட் தேர்வில் நடந்த முறைகேடு குறித்து பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த 5.5.2019ம் ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் சென்னையை சேர்ந்த மாணவர், ஆள் மாறாட்டம் செய்து தேனி மருத்துவக்கல்லூரியில் சேர்ந்தது தெரிய வந்தது பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த மோசடி குறித்து சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி, நீட்தேர்வு எழுதிய மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள், இடைத்தரகர்கள் என அனைவரையும் கைது செய்தனர். மேலும், சிபிசிஐடி போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கும்படி சென்னையை சேர்ந்த தருண்மோகன், ஐகோர்ட் மதுரை கிளையில் மனுதாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் வக்கீல் டி.செந்தில்குமார் ஆஜராகி, "நீட் தேர்வு ஆள் மாறாட்டம் குறித்து சிபிசிஐடி போலீசார் கேட்கும் ஆவணங்களை தேசிய தேர்வு முகமை வழங்கவில்லை. போதிய ஒத்துழைப்பு தரவில்லை" என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பி.புகழேந்தி, "இந்த வழக்கில் 5 ஆண்டுகளாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யாதது ஏன்? இந்த வழக்கில் நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை எதிர்மனுதாரராக சேர்க்கப்படுகிறது. நீட் தேர்வில் ஒரு மாணவருக்காக டெல்லி, ஜார்கண்ட், உத்தரபிரதேசம் மாநில தேர்வு மையங்களில், ஒரே நேரத்தில் நீட்தேர்வு எழுதியது தெரிய வந்துள்ளது. அதில் அதிக மதிப்பெண் (473) கிடைத்த மையத்தை அடிப்படையாக வைத்து, அரசு மருத்துவக்கல்லூரியில் சீட் பெற்றுள்ளது தெரிய வந்துள்ளது.

ஆள் மாறாட்ட புகார் எழுந்துள்ள நிலையில் மாணவர்களை நீட் தேர்வு எழுத அனுமதித்தது எப்படி? ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய நபர்கள் குறித்த விபரங்களை சிபிசிஐடி போலீசார் கேட்டும் தேசிய தேர்வு முகமை எந்தவித பதிலும் கூறாமல் இருப்பது அழகல்ல. தமிழ்நாட்டில் நீட் தேர்வு எழுத வந்த மாணவிகளின் தாலியை கூட கழற்றி சோதனை செய்த தேர்வாணையம், அந்த மாநிலங்களில் ஆள் மாறாட்டத்தை மட்டும் எவ்வாறு அனுமதித்தது. இந்தியாவிலேயே இல்லாத மாணவரை, மூன்று இடங்களில் தேர்வு எழுத அனுமதித்தது எப்படி? எனவே, சிபிசிஐடி போலீசார் கேட்கும் ஆவணங்களை தேசிய தேர்வு முகமை வழங்க வேண்டும். அதன் பின்னர் தான் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய முடியும். தேசிய தேர்வு முகமை, குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயல்படுகிறதா? நீட் தேர்வு விவகாரத்தில் யாரையும் விடுவிக்க முடியாது" என கூறிய நீதிபதி, வழக்கின் விசாரணையை ஜூலை 23ம் தேதிக்கு ஒத்திவைத்தார்

ரயில் இன்ஜின் மோதி 2 வடமாநில இளைஞர்கள் பலி

மதுரை, ஜூலை 11: மதுரை ஐராவதநல்லூர் அருகே கல்லம்பல் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 6 தொழிலாளர்கள் கட்டுமான பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் கியானந்த் பிரதாப் கவுத் (22), மதுசூதன் ப்ராஜபதி (30) இருவரும், அருகிலுள்ள ரயில்வே தண்டவாளத்தை நேற்று கடக்க முயன்றபோது ஆய்வுக்கு சென்ற ரயில் இன்ஜின் மோதி பலியாகினர்.

செங்கல்பட்டில் நேற்றிரவு ஒரு மணி நேரமாக தொடர் மழை

சென்னை, ஜூலை 11: செங்கல்பட்டு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று இரவு திடீரென ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மழை வெளுத்து வாங்கியது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வுமையம் தெரிவித்திருந்தது. இந்நிலையில், செங்கல்பட்டு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று இரவு இடியுடன் பலத்த கனமழை பெய்தது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பெய்த இந்த மழையால் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது.

செங்கல்பட்டு நகரில் அண்ணா நகர், ராமபாளையம், அழகேசன் நகர், அனுமந்த புத்தேரி, ஆலப்பாக்கம், மேலமையூர் மற்றும் வல்லம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

CAPITAL INDIA
Rediscover Business

பதிவு அலுவலகம்: 701, 7ஆவது தளம், அகர்வால் கார்ப்பரேட் டவர், மனை எண்.23, மாவட்ட மையம், ராஜேந்திரா பிளேஸ், புதுடெல்லி, இந்தியா–110008
தொலைபேசி: +91 11 4954 6000
மின்னஞ்சல்: wecare@capitalindia.com
CIN: L74899DL1994PLC128577

பிற்சேர்க்கை IV [காண்க விதி 8(1)]
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க,
கேபிடல் இந்தியா பைனான்ஸ் லிமிடெட் (CIN No.L74899DL1994PLC128577) அதிகாரப் பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடன் ஒப்பந்த எண்.NLNLAPCHN0035183 இன் படி உள்ள கடன்தாரர்(கள்) (1) M.கல்பனா, (2) L.முரளி மனோகர் ஆகியோருக்கு 04.04.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வழங்கியுள்ளார். கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டபடி, கடன் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளின்படி 02.04.2024 தேதியிலிருந்து, 03.04.2024 தேதியின்படி உள்ள ரூ.81,45,467/– (ரூபாய் எண்பத்தி ஒரு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து நானூற்றி அறுபத்தி ஏழு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டியுடன் சேர்த்து கூறப்பட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்கள் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் கடன்தாரர்களுக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட அடமானச் சொத்தினை, 04.07.2024 நாளில் அடையாளப்பூர்வ கவதீனம் செய்துள்ளார்.
கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் 02.04.2024 தேதிய ரூ.81,45,467/– (ரூபாய் எண்பத்தி ஒரு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரத்து நானூற்றி அறுபத்தி ஏழு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டியுடன் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி 03.04.2024 தேதியிலிருந்து கேபிடல் இந்தியா பைனான்ஸ் லிமிடெட்டின் வசூலுக்கு உட்படும்.
கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

அசையா சொத்துகளின் விவரங்கள்

நிலத்தின் பரப்பளவு 2000 ச.அடி. இது மனை எண்.21ஐ கொண்டுள்ளது. பரப்பளவு 1200 நிலம் ஒவ்வொன்றும் மனை எண்கள்.10,11, 17 முதல் 20 மொத்தம் 9200 ச.அடி. இது சர்வே எண்.36/6, புதிய சர்வே எண்.33/6 மற்றும் சர்வே எண்.40/5 புலியூர் கிராமத்தில் ஸ்ரீ மங்களா நகர் என்ற லேஅவுட் பெயருடன், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. மனை எண்.10 எல்லைகள்; வடக்கு: மனை எண்.11, தெற்கு: மனை எண்.9, கிழக்கு: 20 அடி சாலை, மேற்கு: மனை எண்.20, மனை எண்.11, வடக்கு: மனை எண்.12 தெற்கு: மனை எண்.10, கிழக்கு: 20 அடி சாலை மேற்கு: மனை எண்.9, மனை எண்.17, வடக்கு: மனை எண்.16, தெற்கு: மனை எண்.18, கிழக்கு: மனை எண்.13, மேற்கு: 20 அடி ரோடு மனை எண்.18, வடக்கு: மனை எண்.17, தெற்கு: மனை எண்.19, கிழக்கு: மனை எண்.12, மேற்கு: 20 அடி ரோடு, மனை எண்.19, வடக்கு: மனை எண்.18, தெற்கு: மனை எண்.20, கிழக்கு: 20 அடி ரோடு, மேற்கு: மனை எண்.11 மனை எண்.20, வடக்கு: மனை எண்.19, தெற்கு: மனை எண்.21, கிழக்கு: 20 அடி ரோடு, மேற்கு: மனை எண்.10, மனை எண்.21 வடக்கு: மனை எண்.20 தெற்கு: 40 அடி சாலை கிழக்கு: 20 அடி சாலை மேற்கு: மனை எண்.9

தேதி: 04.07.2024
இடம்: திருவள்ளூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேபிடல் இந்தியா பைனான்ஸ் லிமிடெடுக்காக

உள்ளூர் வாகனங்களுக்கு 50% கட்டணம் வசூல்

மதுரை கப்பலூர் டோல்கேட் 9 மணி நேரம் முற்றுகை

போக்லைனுடன் இடிக்க வந்ததால் பரபரப்பு

▶ கப்பலூர் டோல்கேட் முன் முற்றுகையிட்ட மக்கள். அடுத்தபடம்: டோல்கேட்டை இடிக்க கொண்டு வரப்பட்ட பொக்லைன் இயந்திரம்.

திருமங்கலம், ஜூலை 11: மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே கப்பலூரில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குற்பட்ட டோல்கேட்டில் நேற்று முதல் ஜூலை 10ம் தேதி (நேற்று) முதல் திருமங்கலம் உள்ளூர் வாடகை வாகனங்கள் அனைத்தும் 50 சதவீதம் சுங்ககட்டணம் செலுத்தி தான் டோல்கேட்டை கடந்து செல்லவேண்டும் என தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் அறிவித்தது. இது திருமங்கலம் உள்ளூர் மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து கப்பலூர் டோல்கேட் எதிர்ப்பு ஒருங்கிணைப்பு குழுவினர், பல்வேறு சங்கங்கள் நேற்று காலை 9 மணிக்கு கப்பலூர் டோல்கேட்டை தங்களது வாகனங்களுடன் முற்றுகையிட்டனர். திருமங்கலம் எம்எல்ஏ உதயகுமார் உள்பட பல்வேறு அரசியல் கட்சியினர் பங்கேற்றனர். நேற்று காலை 9 மணிக்கு துவங்கிய போராட்டத்தால் திருமங்கலத்திலிருந்து மதுரை நோக்கியும், மதுரையில் இருந்து தென்மாவட்டங்களை நோக்கியும் எந்த வாகனமும் செல்ல முடியாமல் ஸ்தம்பித்தது. இதனால் பள்ளி, கல்லூரி, மற்றும் வேலைகளுக்கு செல்வோர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தகவல் நிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

போராட்டத்தினை கைவிட மறுத்ததால் எம்எல்ஏ உதயகுமார் உள்ளிட்டோரை கைது செய்து வேனில் ஏற்றினர். போராட்டக்காரர்கள், போலீஸ் வேனை எடுக்க விடாமல் தடுத்ததால் போலீசார் அனைவரையும் விடுவித்தனர். தொடர்ந்து பிற்பகல் பொக்லைன் இயந்திரத்துடன் டோல்கேட்டை இடிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர்.

இந்த விவகாரத்தில் அமைதி பேச்சுவார்த்தை வரும் 15ம் தேதி திருமங்கலத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் டோல்கேட் விவகாரத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படுமென்றும், அது வரை திருமங்கலம் பகுதி வாகனங்கள் கட்டணமின்றி சென்று வரலாம் என முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து மாலை 6 மணியளவில், சுமார் 9 மணி நேரம் நடந்த போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.03/2024–2025/வ1/நாள்: 08.07.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர்(நெ) க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், நாகர்கோவில் (1 வேலை) (நெ), க(ம)ப கோட்டம் சார்ந்த மறுசீரமைப்பு பணிக்கு இணையவழியில் மட்டுமே ஒரு உறை சதவீதம் ஒப்பந்தப்புள்ளிகள் 29.07.2024 – 14.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 12.07.2024 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப வட்டம், திருநெல்வேலி
செ.ம.தொ.இ/2271/ஒப்பந்தப்புள்ளி/2024

பிற்சேர்க்கை IV –ஏ
அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002–ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ–ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002–ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.
கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட / ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **சம்மான் கேபிடல் லிமிடெட் (முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிட்.)–ன் [CIN : L65922DL2005PLC136029]** (''செக்யூர்ட் கிரெடிட்டர்'') அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **கையகப்படுத்தியுள்ளார்** என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **சதீஸ்குமார் ஜே, கலைவாணி ஜே மற்றும் வேணுகோபால் ஏ** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **05.07.2024**–லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **04.07.2024** தேதிவரை கடன்கணக்கு எண் **HHLCHE00257721**–ன் மீதாக **ரூ. 23,41,045/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து நாற்பத்து ஒன்று ஆயிரத்து நாற்பத்தைந்து மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **29.07.2024**–ம் தேதி **மாலை 04.00 முதல் மாலை 05.00 வரை ''எங்கிருக்கிறதோ அங்கு'', ''உள்ளது உள்ளபடி'', மற்றும் ''எதுவாக இருந்தாலும்''** விற்பனை செய்யப்படும்.
அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 13,00,000/- (ரூபாய் பதிமூன்று லட்சம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (''ஈஎம்டி'') ஏல மதிப்பில் 10%–க்குச் சமமான அதாவது **ரூ. 1,30,000/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)** ஆகும்.

அசையா சொத்தின் விவரம்:

ஃப்ளாட் எண். டி–10, முதல் தளம், ஏ–பிளாக், ஆசீர்வாத் ஹோம்ஸ் – கிரிஸ்டல் பார்க், புல எண். 197/1, மாஹாணியம் கிராமம், மாஹாணியம் கிராமம் ரோடு, ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு – 601301

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்தின் இணையதளம், அதாவது கொடுக்கப்பட்டுள்ள www.sammaancapital.com என்ற இணைப்பில் பார்க்கவும். தொடர்பு எண் : 0124-6910910, +91 7065451024 ; மின்னஞ்சல் முகவரி: auctionhelpline@sammaancapital.com ஏலத்திற்கு, வருகை தரவும் www.auctionfocus.in.

தேதி : 04.07.2024
இடம்: காஞ்சிபுரம்
அங்கீகாரம் பெற்ற அதிகாரி
சம்மான் கேபிடல் லிமிடெட்
(முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிட்.)

ரயில் மறியலில் ஈடுபட்ட வக்கீல்கள்

▶ ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள 3 புதிய குற்றவியல் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் வக்கீல்கள் நேற்று ரயில் மறியல் போராட்டம் நடத்தினர். திண்டுக்கல்லில் ரயில் முன் அமர்ந்து மறியலில் ஈடுபட்ட வக்கீல்கள்.

TATA
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6)ன் படி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 29–07–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–07–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 27–07–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	TCHHL0 40400010 0084281	திரு. C முகமது ஹனீப் திருமதி. ரேஷ்மாஷாஹுதியா C S	Rs. 2,25,96,684/- ---------- 09-11-2022	பிளாட் எண்.S1– ரூ.58,50,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.54,00,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.54,00,000/–	பிளாட் எண்.S1– ரூ.5,85,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.5,40,000/– மற்றும் பிளாட் எ